# First I2U2 (India-Israel-UAE-USA) Leaders' Virtual Summit

July 12, 2022

## முதல் I2U2 (இந்தியா-இஸ்ரேல்-ஐக்கிய அரபு எமிரேட்ஸ்-அமெரிக்கா) தலைவர்களின் மெய்நிகர் உச்சிமாநாடு

ஜூலை 12, 2022

இஸ்ரேல் பிரதமர் யாயர் லபிட், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தலைவர் முகமது பின் சயீத் அல் நஹ்யான் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோசப் ஆர். பிடன் அவர்களுடன் இணைந்து பிரதமர் திரு நரேந்திர மோடி I2U2 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார். I2U2 இன் முதல் தலைவர்கள் உச்சிமாநாடு 2022 ஜூலை 14-ஆம் தேதி அன்று மெய்நிகர் முறையில் நடைபெறும். 2021 ஆம் ஆண்டு அக்டோபர் 18-ஆம் தேதி நடைபெற்ற நான்கு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பின் போது I2U2 குழுமமானது கருத்தாக்கப்பட்டது. ஒவ்வொரு நாடும் ஒத்துழைப்புக்கு வாய்ப்புள்ள பகுதிகளைப் பற்றி விவாதிக்க ஷெர்பா மட்டத்திலான தொடர்புகளை வழக்கமாகக் கொண்டுள்ளன,

2. நீர், ஆற்றல், போக்குவரத்து, விண்வெளி, சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு போன்ற பரஸ்பர அடையாளம் காணப்பட்ட ஆறு துறைகளில் கூட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதை I2U2 நோக்கமாகக் கொண்டுள்ளது. உள்கட்டமைப்பை நவீனப்படுத்தவும், நமது தொழிற்துறைகளுக்கான குறைந்த கார்பன் வளர்ச்சிப் பாதைகளை மேம்படுத்தவும், பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும், முக்கியமான வளர்ந்து வரும் மற்றும் பசுமை தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் தனியார் துறை மூலதனம் மற்றும் நிபுணத்துவத்தை திரட்ட இது விரும்புகிறது.

3.நமது பிராந்தியங்கள் மற்றும் அதனை தாண்டியும் வர்த்தகம் மற்றும் முதலீட்டில் பொருளாதார கூட்டுறவை பலப்படுத்துவதற்காக I2U2 சட்டத்திட்டங்களுக்குள் சாத்தியமான கூட்டுத் திட்டங்கள் மற்றும் பரஸ்பர நலன்கள் கொண்ட பிற பொதுவான துறைகள் குறித்து தலைவர்கள் விவாதிப்பார்கள். இந்த திட்டங்கள் பொருளாதார ஒத்துழைப்பிற்கு ஒரு முன்மாதிரியாகவும், நமது வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்கவும் உதவும்.

**புது டெல்லி**

ஜூலை 12, 2022

DISCLAIMER: This is an approximate translation. The original is available in English on MEA's website and may be referred to as the official press release.